புதுச்சேரி அரசு
கலை, பண்பாட்டுத் துறை

எண்.7164/கபது/தி1/2023

புதுச்சேரி, நாள்:04.12.2023

# செய்திக் குறிப்பு

---

புதுச்சேரி அரசு, கலை, பண்பாட்டுத்துறை சார்பில் புதுச்சேரி எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்களை, கலை, பண்பாட்டுத்துறையின் கீழ் இயங்கும் நூலகங்களுக்கு கொள்முதல் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

புதுச்சேரி அரசு, கலை, பண்பாட்டுத்துறையானது நூலக வாசகர்களுக்காக பல்வேறு தலைப்பிலான புத்தகங்களைக் கொள்முதல் செய்துவருகிறது. அதன் அடிப்படையில் புதுச்சேரி எழுத்தாளர்களிடமிருந்து அவர்கள் எழுதிய புத்தகங்களை கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதலால் புதுச்சேரி எழுத்தாளர்கள் தங்களது புத்தகங்கள் குறித்த தகவலைக் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கலாம்.

1. கொள்முதலுக்கு அனுப்பப்படும் நூல்கள் அனைத்தும் 2020 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிப்பிக்கப்பட்டவையாக இருக்கவேண்டும்.
2. கொள்முதல் செய்யப்படும் புத்தகங்களுக்கு குறைந்தபட்சம் 15% கழிவு அளிக்கப்படவேண்டும்.
3. விண்ணப்பத்துடன் மாதிரி புத்தகம் இணைக்கப்பட வேண்டும்.
4. ஒரு எழுத்தாளரிடமிருந்து அதிகபட்சமாக இரண்டு தலைப்புகள் மட்டுமே கொள்முதல் செய்யப்படும்.
5. விண்ணப்பதாரர் புதுவையில் பிறந்தவராகவோ / ஐந்தாண்டுகள் புதுவை ஒன்றிய ஆட்சிப்பரப்பில் விண்ணப்பிக்கும் நாளுக்கு முன் தொடர் குடியிருப்பு உடையவராகவோ இருத்தல் வேண்டும்.
6. இது தொடர்பான விதிகளைத் தேவைக்கேற்ப அவ்வப்போது திருத்தவோ, மாற்றவோ, நீக்கவோ அரசுக்கு முழு அதிகாரம் உண்டு.
7. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் எழக்கூடிய பிரச்சனை குறித்து அரசால் மேற்கொள்ளக் கூடிய முடிவே இறுதியானது. புத்தகத் தேர்வு பரிந்துரைக் குழுவின் தீர்ப்பே இறுதியானது. இத்தீர்ப்பை மறுத்து நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.
8. விண்ணப்பங்கள் மற்றும் விதிமுறைகளின் நகலை கீழ்க்கண்ட முகவரியில் நேரிலோ அல்லது கீழ்க்கண்ட **https://art.py.gov.in/** இணையதளத்திலோ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
9. பூர்த்தி செய்த விண்ணப்பங்களை **29.12.2023** ஆம் தேதிக்குள் கீழ்குறிப்பிட்ட இவ் அலுவகலத்தில் சமர்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இயக்குநர்
கலை, பண்பாட்டுத் துறை
1,ரோமன் ரோலண்ட் வீதி
புதுச்சேரி 605001